**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No.187/2025**
**Sessions :**
**Deposition of Witness for :PW2, LW7**

| | |
|---|---|
| Name | திரு.தேவதாஸ் |
| Father's/Husband Name | திரு.ஞானசிகாமணி |
| Village | |
| Taluk | |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 07th day of September, 2026**

எதிரி தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்.

<u>முதல் விசாரணை</u>:-

1. நான் தற்போது சித்தாமூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன்.

2. கடந்த 26.06.2023 அன்று அணைக்கட்டு காவல் உதவி ஆய்வாளராக காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது கெங்காதேவி, க/பெ.மணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.202/2023, இ.த.ச.294(பி), 323, 506(2) IPC r/w 4 of TNPHW Act பிரிவுகளின் படி வழக்கு பதிவு செய்துள்ளேன். **(மேற்படி அந்த புகார் மனு அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பூபாலன் மற்றும் தனுஷ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ

இடத்தை பார்வை இட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகசர் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. புகார்தாரர் கெங்காதேவி பட்டியல் சாட்சிகள் 2 முதல் 6 வரையான மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான பூபாலன் மற்றும் தனுஷ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரியை பேக்கரணை முத்துமாரியம்மன் கோயில் அருகே 26.06.2023 அன்று கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது 03.07.2023 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:-**

4. சம்பவ இடம் சென்று விசாரணை செய்தேனா என்றால் செய்தேன். சம்பவ இடத்திற்கு செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்து ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடம் செல்லாமலும், காவல் நிலையத்தில் வைத்து விசாரித்து பொய்யாக வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. வழக்குக்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்து கொள்ளப்படுகிறது)**

**மறு விசாரணை...இல்லை**

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.